/1240835/2023

072829

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

கடித எண்.1308 /ப.க.4(1)/2023-1 நாள் 06-11-2023

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை-6. (இணைப்புடன்)

17 NOV 2023

ஐயா,

பொருள் கருணை அடிப்படை பணி நியமனம் – உரிய அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்த பின் அரசளவில் ஒப்புதல் கோருதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 02.03.2016.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 26.02.2021.
4. தங்களின் கடித ந.க.எண்.41477/ஜே/ இ/2022, நாள் 09.12.2022.

***********

பார்வையில் காணும் தங்களது கடிதத்தின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை 1-ல் காணும் அரசாணையில், 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் வரன்முறைப்படுத்தப்பட்டது, மேலும் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வரும் பதவிகளில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்திய பின், 1954-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16(b)-ன் கீழ்

தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு உரிய முன்மொழிவுகள் நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

3. பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டது.

4. பார்வை 3–ல் காணும் அரசாணையின்படி, 2.2.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் வரன்முறைப்படுத்தப்பட்டது, மேலும் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை ( Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

5. மேற்தெரிவிக்கப்பட்ட நிலையில், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், இனிவருங்காலங்களில் கருணை அடிப்படை பணி நியமனங்களில் விதித்தளர்வு இல்லாத நேர்வுகளில் இளநிலை உதவியாளர் பதவியில் உரிய அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்தபின் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

06/11/23

அரசு செயலாளருக்காக.

6/11/23